# தினசரி பாராயணப் பாடல்கள்

(விநாயகர் அகவல், சிவபுராணம் உள்பட)




**திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்**

2, லாசன்ஸ் ரோடு, திருச்சி-620 001.

✆ 0431 - 2461415


Rs. 10/-

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | விநாயகர் அகவல் | 1 |
| 2 | சிவபுராணம் | 6 |
| 3 | கோளறு பதிகம் | 13 |
| 4 | திருநீற்றுப் பதிகம் | 19 |
| 5 | திருக்கயிலாயம் போற்றி | 20 |
| 6 | பித்தா பிறை சூடி | 22 |
| 7 | நவக்கிரக கவசம் | 23 |
| 8 | ஹரிவராசனம் (தமிழில்) | 26 |
| 9 | திருஅருட்பா | 28 |
| 10 | திருப்புகழ் | 29 |
| 11 | வாழ்த்து | 30 |

# 1. விநாயகர் அகவல் (ஔவையார்)

1. **சீ**தக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்

2. **பே**ழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்

3. **நா**ன்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்

4. **சொ**ற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்

5. **தா**யாய் எனக்குத் தான்எழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளம்தனில்புகுந்து

6. **கு**ருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே

7. **உ**வட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்

8. **க**ருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்து எனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே

9. **ஒ**ன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

10. **இ**டைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின்நாவில் உணர்த்திக்

11. **கு**ண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறி வித்தே

12. **அ**முத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்

13. **ச**ண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

14. **க**ருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிது எனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து

15. **வா**க்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்

16. **எ**ல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி

17. **அ**ணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

18. **அ**ஞ்சு அக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்துஎனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்

* * *

# 2. சிவபுராணம்

## (திருவாசகம் மாணிக்கவாசகர் - 8ஆம் திருமுறை)

### வெண்பா

தொல்லை யிரும்பிறவிச்சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!

ஏகன், அநேகன், இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!

கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி! சிவன்சே வடிபோற்றி!

நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீர்ஆர் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி!

சிவன், அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்,
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை,
முந்தை வினை முழுதும் ஓய, உரைப்பன்யான்
கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட, வந்தெய்தி,
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி,
விண்நிறைந்து, மண்நிறைந்து, மிக்காய், விளங்கு ஒளியாய்!
எண் இறந்து, எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்,

பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்,
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்துஇளைத்தேன்; எம்பெருமான்!
மெய்யே, உன் பொன் அடிகள் கண்டு, இன்று வீடு உற்றேன்;

உய்ய, என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
'ஐயா' என, ஓங்கி, ஆழ்ந்துஅகன்ற, நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமானன் ஆம் விமலா!

பொய்ஆயின எல்லாம் போய்அகல, வந்துஅருளி
மெய்ஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச் சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்அறிவே!

ஆக்கம், அளவு, இறுதி இல்லாய்! அனைத்து உலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!

மாற்றம், மனம் கழிய நின்ற மறையோனே!
கறந்த பால், கன்னலொடு, நெய் கலந்தாற் போலச்
சிறந்து, அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!

நிறங்கள் ஓர் ஐந்துடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான்! வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம், பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி,

புறம்தோல் போர்த்து, எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன்ஜந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்

கலந்த அன்பு ஆகிக், கசிந்து உள்உருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி,
நிலம்தன்மேல் வந்தருளி, நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!

நேசஅருள் புரிந்து, நெஞ்சில் வஞ்சம்கெட,
பேராது நின்ற பெரும் கருணைப் பேர்ஆறே
ஆரா அமுதே! அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!

நீராய் உருக்கி, என் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையுமாய், அல்லையுமாய்
சோதியனே! துன் இருளே! தோன்றாப் பெருமையனே!

ஆதியனே! அந்தம், நடுவாகி, அல்லானே!
ஈர்த்துஎன்னை, ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார்
தம்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே! நுணுக்கு அரியநுண்உணர்வே!

போக்கும் வரவும், புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும்என் காவலனே! காண்புஅரிய பேரொளியே!
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து, அறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப

ஆற்றேன், எம் ஐயா, அரனேயோ என்று என்று
போற்றிப் புகழ்ந்துஇருந்து, பொய்கெட்டு, மெய்யானார்
மீட்டு இங்குவந்து, வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!

நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ‘ஓ’ - என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன்அடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

❊ ❊ ❊

# 3. கோளறு பதிகம்

## ( திருஞானசம்பந்தர் - 2ஆம் திருமுறை)

பண் : பியந்தைக் காந்தாரம் ராகம் : நவரோஜ்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

2. என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதோடு ஒன்றோடு ஏழு பதினெட்டோ டாறும்
உடனாயநாள்கள் அவை தாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

3. உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

4. மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

5. நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடை ஏறும் எங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

6. வாள்வரி அதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

7. செப்பிள முலைநன் மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

8. வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

9. பலபல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

10. கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

11. தேனமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆனை நமதே

திருச்சிற்றம்பலம்

# 4. திருநீற்றுப்பதிகம்
## (திருஞானசம்பந்தர் - இரண்டாம் திருமுறை)

திருஆலவாய்

பண் : காந்தாரம்

ராகம் : நவரோஸ்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே;

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

* * *

## 5. திருக்கயிலாயம் போற்றித் திருத்தாண்டகம்

### ( திருநாவுக்கரசர் - 6ஆம் திருமுறை)

விருத்தம்

1. வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

2. வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

3. பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

4, உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

❊ ❊ ❊

# 6. பித்தா பிறை சூடி

**(சுந்தரமூர்த்தி - ஏழாம் திருமுறை )**

திருவெண்ணெய்நல்லூர்

பண் : இந்தளம்
ராகம் : நாதநாமக்ரியா

பித்தாபிறை சூடிபெரு மானே அரு ளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக் காளாய் இனி அல்லேன்எனல் ஆமே.

திருச்சிற்றம்பலம்

❊ ❊ ❊

## 7. நவக்கிரக கவசம்

ராகம் : பூபாளம்

**சூரியன் :**

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய் !

**சந்திரன் :**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றித் திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சதுரா போற்றி !

**அங்காரகன் :**

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு!

**புதன் :**

இதமுற வாழ இன்னல் நீக்கும்
புத பகவானே பொன்னடி போற்றி
பதந் தருவாய்ப் பன்னொளி யானே
உதவியே அருளும் உத்தமா போற்றி!

**குரு :**

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வை மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழக் குருபர நேசா
கிரகதோஷ மின்றி கடாட்சித் தருள்வாய்!

**சுக்கிரன்:**

சுக்கிர மூர்த்தி சுகசுப மீவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே!
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே!

**சனி :**

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்செகம் வாழ இன்னருள் தாதா!

**ராகு:**

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி!

**கேது :**

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி!

❊ ❊ ❊

# 8. ஹரிவராசனம் (தமிழில்)

புலவர் சு. ரவி

ராகம் : மத்தியமாவதி

1. விரியும் வானெலாம் விளங்கவே தினம்
பரிதி ஊர்வலம் ஆராதனை தரும்
அருவி நர்த்தனம் செய்திடும் வனம்
ஹரிஹரன் பதம் தேடும் என்மனம். (சர)

2. ஒளி நிலாமுகம் உள்ள மெங்கிலும்
உவகை தந்திடும் ஒளி யுமிழ்ந்திடும்
வளியுலா வரும் வளர்ந்த கானகம்
ஹரிஹரன் பதம் தேடும் என்மனம். (சர)

3. கலி தகர்ந்திடும் கனல் நிகர்த்திடும்
களப மேனியோ கவி கொடுத்திடும்
புலியுலா வரும் புதருனும் வனம்
ஹரிஹரன் பதம் தேடும் என்மனம். (சர)

4. திசைகள் எட்டிலும் மலை முகட்டிலும்
சரண கோஷமே எதிரொலித் திடும்
திசை மயங்கிடும் இருண்ட கானகம்
ஹரிஹரன் பதம் தேடும் என்மனம். (சர)

5. அரிய அனுபவம் அணுகும் பரவசம்
ஐம் புலன்களும் ஐயனின் வசம்
கரியுலா விடும் கதிர் புகாவனம்
ஹரிஹரன் பதம் தேடும் என்மனம். (சர)

6. துயர் துடைத்திடும் விழிகள் அம்புஜம்
துளசி மாலைகள் புரளும் திண்புஜம்
கயல் உலாவரும் பம்பையின் வனம்
ஹரிஹரன் பதம் தேடும் என்மனம். (சர)

7. சபரி க்ஷேத்ரமே ப்ரம்ம மந்திரம்
சரண கோஷமே ப்ரணவ மந்திரம்
இபம் உலாவரும் வரையெழும் வனம்
ஹரிஹரன் பதம் தேடும் என்மனம். (சர)

8. மண்டல வ்ரதம் விரும்பும் தெய்வதம்
மகர ஜோதியாய் தரிசனம் தரும்
அண்டம் யாவையும் ஒடுங்கிடும் வனம்
ஹரிஹரன் பதம் தேடும் என்மனம். (சர)

❊ ❊ ❊

## 9. திருஅருட்பா (வள்ளலார்)

### நமச்சிவாய சங்கீர்த்தன லகரி

ராகம் : ரஞ்சனி

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந்தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை! நான்மற வேனே.

திருச்சிற்றம்பலம்

❊ ❊ ❊

## 10. திருப்புகழ் - அருணகிரிநாதர்

### (திருஆவினன்குடி)

ராகம் : ரஞ்சனி

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன்குடிப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்

* * *

## 11. வாழ்த்து

ராகம் : மத்தியமாவதி தாளம் : ஆதி

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியார் எல்லாம்

## கந்தபுராணம்

ராகம் : மத்தியமாவதி

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

✳ ✳ ✳

## வேண்டுகோள்

இப்புத்தகத்தில் பிழை ஏதேனும் இருந்தால் தெரியப்படுத்தலாமே! திருத்திக்கொள்ள வசதியாக இருக்கும். நன்றி.



## AUDIO CD

இப்புத்தகத்தில் அடங்கியவை ஓதுவார் அவர்களால் பாடப்பெற்று Audio CD வடிவில் விற்பனைக்கு உள்ளது.